தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திருவள்ளுவர் ஆண்டு 2017 சிலை (11-1-1987) 85 காசுகள் [இதழ் எண்: 78] [பகுதி34-37

தமிழ்நாட்டை முழு இறைமையுடைய தனிநாடாகப் பிரித்துத் தமிழரே ஆளுமை செய்வது-என, சென்னையில் நடந்த தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு உறுதியாகவும் இறுதியாகவும் தீர்மானிக்கிறது!

இந்தியத் தேசியம் மண்ணானது! மாநிலத் தன்னாட்சி கனவானது! தனித்தமிழ்நாடு நனவானது!

தமிழ் மக்களின் வரலாறு காணாத தீர்ப்பு இது!

தமிழக அரசும் தில்லி ஆட்சியும் இதற்குச் செவி சாய்த்தே ஆக வேண்டிய காலம் வரத்தான் போகிறது.

அதுவரை நாம் ஓயவும் தலை சாயவும் முடியாது!

கடந்த திசம்பர் 27,28-இல், சென்னை மாநகரில், பெரியார் திடலில், நாம்அனைவரும் மிக்க ஆர்வத்துடனும், அழிக்கவொண்ணாத் தேவையுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு' இறுதியில் நடந்தே முடிந்தது.

***

காலம் இக் கருத்துக்கு இயைபாக இருக்கவில்லையானாலும், காவல்துறை கட்டவிழ்த்து விடப்பெற்றுக் கையில் பை வைத்துக் கொண்டு, வண்டியிலிருந்து இறங்கி நடந்து வந்தவர்களெல்லாம், தடுத்து நிறுத்தப் பெற்று, ஆய்வு செய்யப்பெற்று, உசாவலுக்கு அழைத்துச் செலலப் படுவர் என்னும் அஞ்சத்தகுந்த நடுநடுக்கும் அரசியல் சூழலிலும், தமிழுக்கு ஆதரவாகவும் இந்திக்கு எதிராகவும் குரல் கொடுத்த தமிழின வீரர்கள் இருபத்தையாயிரவர்க்கு மேல் சடுஞ்சிறை புகுந்த நேரத்திலும் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு யார் வரப் போகிறார்கள் என்று எண்ணியிருந்த வேளையிலும், நூற்றுக்கணக்கான வீரத் தமிழர்கள். அறிஞர்கள், தலைவர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மகளிர் முதலிய அனைவரும் கருத்தரங்கில் மிகத் துணிவுடன் கலந்து கொண்டனர்! ஒப்போலை இட்டனர். தனித்தமிழ்நாடுதான் தேவை என்று உறுதியான கொள்கையைத் தேர்ந்தனர்.

அடடா! எத்துணை ஆர்வம் அவர்கள் முகத்தில் குமிழிட்டது! எத்துணை வீரம் அவர்கள் பேச்சில் கொப்பளித்தது! எத்துணை உறுதி அவர்கள் குரலில் கனன்று நின்றது! காட்சி! காட்சி! கண்கொள்ளாக் காட்சி! (செய்திச் சுருக்கம் உள்ளே தொடர்கிறது)

இறுதியாக, இரண்டாம் நாள் முடிவில், ஒப்போலைக் கருத்தெடுப்பு மிக மிக அமைதியாக, மிக மிக நேர்மையாகப் பொறுப்புணர்வுடன் நடைபெற்றது. அதன் முடிவோ அனைவரும் வியக்கும்படி அமைந்திருந்தது. வியப்பு! வியபபு! வாய்மேல் விரல் வைக்கும் வழிந்தோடும் வியப்பு!

முடிவில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பெற்றது. தேர்தலில் கலந்து கொண்டவர்கள்: 241 இவர்களுள் இந்தியத் தேசியத்திற்காக ஒப்போலையிட்டவர் ஏழு பேர்; மாநிலத் தன்னாட்சியை விருப்பி ஒப்போலை இட்டவர் இருபத்து மூவர்! தனித்தமிழ்நாட்டுக் கொள்கையே, எதிர்காலத் தமிழின முன்னேற்றத்திற்கு ஏற்றந் தருவது என்று உறுதியாகவும இறுதியாகவும் ஒப்பம் அளித்தவர், இருநூற்று எட்டுபேர்! இது மொத்தத்தில் 87 விழுக்காடு!

இந்தியத் தேசியத்தை விரும்பும் 2·7 விழுக்காடு எங்கே! மாநிலத் தன்னாட்சியை விழையும் 9·6 விழுக்காடு எங்கே! தனித்தமிழ்நாட்டை வேட்கும் 87 விழுக்காடு எங்கே!

எத்துணைப் பொருத்தமான தீர்ப்பு!

தமிழக மக்கள் அனைவருமே வந்து கொடுத்த தீர்ப்போலையாக அம்முடிவு பெரும் வெற்றி முழக்கத்துடன், பெரியார் அரங்கமே எதிரொலிக்குமாறு உரக்க வாழ்த்தி வரவேற்கப் பெற்றது. அதைக் கேட்ட அனைவரும் தமிழகமே தனியாட்சி எய்தியது போன்று பூரிப்பெய்தினர் அங்கு வந்திருந்தோர்! தமிழகத்திலுள்ள - அங்கு வர வாய்ப்புக் கிடைக்காத தமிழரும் - பிற வெளிநாட்டுத் தமிழரும் அவ்வெற்றி முழக்கத்துடன் தங்கள் வாழ்த்தொலியையும் கலந்து ஒலிப்பார்களாக!

வெல்க தமிழின முன்னேற்றக் கழக முயற்சிகள்!
வாழ்க தனித்தமிழகப் போராட்டம்!
விரைந்து சமைப்போம் தனித்தமிழ்நாடு!

கருத்தரங்கை வரவேற்று வாழ்த்துரைத்த நெஞ்சங்கள்!

1. ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுக்க...!

மதிப்பிற்கும் அன்பிற்கும் இனிய ஐயா அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள்...

உ. த. மு. க. நடத்தும் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கைப் பற்றிப் போன தென்மொழியின் மூலம் விளக்கம் அறிந்தேன். அது நடக்கப் போவதைப் பற்றி எண்ணி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கருத்தரங்கிற்கு என்னாலியன்ற பொருளுதவி செய்ய எண்ணி இக் கடிதத்துடன் சிறு தொகை (உரு 50) வைத்துள்ளேன். இதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஐயா, இக் கருத்தரங்கிற்கு ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுக்க என் மனம் எண்ணுகிறது. ஆனால், என்னிடம் அந்த அளவிற்குப் பொருள் வசதி இல்லையே என எண்ணி வருந்தப் படுகிறேன் ஐயா!

—ச. சாகிர், சென்னை-23

(இவரிடமிருந்து மேலும் உரு 50-நன்கொடை வந்தது).

2. அரசியல் சாய்கடைக்கு அப்பால்...!

அன்பு செழுமிய ஐயாவிற்கு,

பணிவான வணக்கங்கள். திசம்பர் 27, 28 இல் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு குறித்து இவ்விடத்தில், நண்பர்களிடத்தில் விளக்கி வருகிறோம்.

அழிந்து வரும் ஈழத்தமிழினத்தைக் காத்திடவும், அருகிவரும் தமிழ் உணர்வினைச் செம்மைப் படுத்திடவும், அடிமைப் பட்டிருக்கும் தமிழ்ச்சாதியினை; அரசியல் சாய்கடைக்கு அப்பால் முன்னுயர்த்தி விடவும் இக் கருத்தரங்கு துணை புரிந்திடும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள் நாம்.

இந்தி ஆளுமையை எதிர்த்திடும் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சட்டத்தின் படியைத் தீக்கிரையாக்கிடும் தாய பணியில் ஈடுபட இருப்பதால் தளை செய்யப்பட்டுச் சிறை புகவும் வாய்ப்பிருப்பதால் கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு வர இயலாது எனத் தோன்று

(தொடர்ச்சி அடுத்த பகுதி பார்க்க)

கிறது எனவே, தாங்கள் அன்பு கூர்ந்து இத் தொண்டனின் நிலையைப் புரிந்து கொண்டு, வருத்த முறுமா இருக்க வேண்டுகிறேன்.

—சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தாலும் 27, 28-ஆம் நாள்களில் மனம் பெரியார் திடலை நோக்கியே சிறகடித்துப் பறக்கும்.

அன்புடன், அரியூர் திருவுடையார்.
ஆசிரியர், எழுஞாயிறு திருச்சி-2

3. என்னையும் மறவாமல் அழைப்பிதழ் அனுப்பி...

அன்புள்ள ஐயா, வணக்கம். தங்கள் அழைப்பிதழ் கிடைத்தது. நன்றி, இரு நாள்களும் தவறாமல் நான் வருவேன். என் கருத்து தெரிந்ததே. அதை அங்குக் கூறித்தான் ஆகவேண்டும் என்பதில்லை என்னையும் மறவாமல் அழைப்பிதழ் அனுப்பி வைத்தமைக்கு, மீண்டும் ஒருமுறை நன்றிகூறிக் கொள்கிறேன்

தமிழின விடிவுக்கான தீர்வை மாநாடு நாடுமாக! வெற்றி பெற வாழ்த்துகிறேன். அன்புடன்,

அரு. கோபாலன், சென்னை.

4. பாராட்டுகள்!

அன்புடையீர், வணக்கம். அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். பாராட்டுகள். கருத்தரங்கில் கலந்து கொண்டு, கருத்து அறிவிக்க இசைகிறேன் நன்றி.

டாக்டர் சாமி. சண்முகம், சென்னை.

5. தோல்வியை எண்ணிப் பாருங்கள்

அன்பு சான்ற ஐயா, வணக்கம் 27, 28 நிகழ்ச்சிக்குப் பெரும்பாலும் வர எண்ணியுள்ளேன். அந் நிகழ்ச்சியைத் தள்ளி வைப்பதோ அல்லது திருத்தியமைப்பதோ இன்றைய தேவையாகும்! மாநாட்டில் ஒரே தீர்மானந்தான் நிறைவேற்றப்படும் எனக் கூறியிருக்கிறீர்கள். ‘தமிழக விடுதலை தேவை, எனத் தீர்மானம் போட்டால் தாங்கள் எதிர்பார்க்கிற தமிழர் நலன் கிட்டாது. சென்ற முயற்சிகளில் தங்கட்குத் தோல்வி கிடைத்ததை எண்ணிப் பாருங்கள்! தமிழரின் நிலைகள் தெரிந்தவைதாம்!

தங்கள் கொள்கைக் கேற்ப ஓர் இயக்கத்தை அமைத்து வளர்க்காமல், அதன் வாயிலாய்க் கொள்கைப் பரப்புதலோ செய்யாமல், திடுமென அவ்வப் போது தீர்மானம் போடுவதன் பின்னணியில் யார் இருக்கிறார்களோ தெரியவில்லை; சட்டப்படியான தமிழுரிமை பெறும் முயற்சியாக இம் மாநாட்டை மாற்றுங்கள்! வழிபாடு, ஆட்சிமொழி, பயிற்று மொழி இவற்றில் உரிமை கேட்பதற்கான முயற்சியாக இதைச் செய்யுங்கள்!

—க. தமிழ்மல்லன், புதுச்சேரி-9

6. வெற்றிபெற வாழ்த்துகின்றேன்

அன்புடையீர், வணக்கம். தாங்கள் அனுப்பிய தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு பற்றிய அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றோம். நன்கொடையாக உரு 100-க்கான காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளோம் பெற்றுக் கொள்ளவும்.

நடைபெறவிருக்கும் இவ்விருநாள் கருத்தரங்குகளிலும் நேரம் கிடைப்பின் திரு. இராம. அரங்கண்ணல் அவர்களும் கலந்து கொள்வார்கள். தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு வெற்றிபெற வாழ்த்தும் அன்பன்

கி. இரவிச்சந்திரன்
உதவியாளர்
திரு. இராம. அரங்கண்ணல் அவர்களுக்காக.

7. வாழ்த்துகிறேன்

அன்புடையீர், வணக்கம். அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன், கருத்தரங்கு சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறேன். அன்புடன்

ஆசிரியர், ‘தராசு’

8. பெருமுயற்சி கண்டு பெருமகிழ்வு!

பேரன்புடையீர், வணக்கம். தங்களின் பெருமுயற்சி கண்டு பெரு மகிழ்வு எய்தினேன். இனி, பேச்சு, மூச்சு யாவும் செயலாக வேண்டும். இதற்குத் தமிழகமே, உலகமே முன்வந்து பணியாற்றல் வேண்டும். நம்முன் ஆழ்ந்து கிடக்கும் பிளவுப் போக்குகளே மாற்றார்க்கு எருவாகின்றன. யாரை யார் ஒப்பு நோக்க வல்லார்?... அது கிடக்க. இனி, நம் முயற்சியினைத் தொடர்வோம்.

புலவர் தி தேவிதாசன் க. மு, கல். இ, புதுவை-1

9. வெற்றிபெற வாழ்த்துகின்றேன்

வணக்கத்திற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு, வணக்கம்... கருத்தரங்கில் பங்குபெற வேண்டும் என்ற வேணவா மிக்கிருந்தும், அக்கால் சேலத்தில் M. Ed.. தேர்வு எழுத வேண்டிய நிலையிருப்பதால் வர இயலாமைக்குப் பொருத்தருள வேண்டுகின்றேன்.

...தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு அனைத்து நிலைகளிலும் சிறக்க, வெற்றிபெற, ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ண, நெஞ்சார்ந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி, தங்கள் அன்புள்ள
கடலூர் மணிமாறன். கிருட்டிணராயபுரம்.

10. சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக!

தமிழன்னையின் கண்மணியே!

வணக்கம். தங்கள் அழைப்பிதழ் வந்தது. மிக்க நன்றி. கருத்தரங்கு காலத்திற்கேற்ற கருவியாகும். கூனர் தமிழர்களை நிமிரச் செய்யும்; ஊமையரைப் பேசவைக்கும்; செவிடர்களைக் கேட்கச் செய்யும்; குருடர்களுக்குப் பார்வை அளிக்கும்.

உங்கள் அறிக்கையில் கண்ட கருத்துகளைப் படிக்க படிக்க என் உள்ளம் உருகியது; கண்ணீர் பெருகியது.

கருத்தரங்கு எல்லா வகையிலும் இனிது நிறைவேறுமாறு அகம் குளிர முகம் மலர வாழ்த்துகின்றேன்.

பல நாள்களாக உடல் நலமில்லை. ஆர்வம் இருக்கிறது. நான் இங்கே இருந்தாலும், என் உள்ளம் அங்கேதான் இருக்கிறது. கலந்துகொள்ள இயலாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன்.

உங்கள் சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக! என்றும் உங்கள் அன்பன்,

தணிகை உலகநாதன், சென்னை.

11. தமிழின மீட்சிக்கு தமிழ் நாட்டு விடுதலை ஒன்றே வழி!

அன்புநிறை ஐயா, வணக்கம். தங்கள் முயற்சியில் நிகழவுள்ள இக் கருத்தரங்கின் தீர்மானம ‘தமிழின மீட்சிக்குத் தமிழ்நாட்டு விடுதலை ஒன்றே வழி’- என் அமைந்திடல் வேண்டும். இஃது என் அஞ்சல் வழி ஒப்போலை. தமிழின விடுதலை கழகமும் (T. N. L. F) தங்கள் உ. த. மு. கழகமும் இணைந்து பேரியக்கமாக வடிவமைந்து போராடிடல் வேண்டும்.

நன்றியுள்ள தரங்கை பன்னீர்ச்செல்வன்
திருமருகல்

12. முழுமையாக ஈகமாக்கிக் கொண்டு...!

தமிழும் தாய்மையும் இணைந்துள்ள பாவலரேறு அவர்கட்கு நெஞ்சார்ந்த வணக்கம். அழைப்பும் அறிக்கையும் கைவரப் பெற்றேன். நன்றி. ...உலக முதன் மக்கள்- உலக முதன்மொழிக் காரர்கள் என்று, இன-மொழி வரலாற்றுப் புகழுக்கு ஆட்பட்டிருக்கின்ற இன்றைய மானமற்ற தமிழினம்- அரசியல், பொருளியல், மொழி, கலை. பண்பாடு- போன்ற அனைத்து நிலையிலும், முதன்மை பெற வேண்டுமென்றால், அனைத்துத்தமிழர்களும் மொழி, இனம், நாடு என்ற கொள்கை வழி, அரசியல், சாதி, இனத்தலைவர்கள் அனைவரும், தத்தம் தனித்தன்மைகளை விட்டொழித்துத் தமிழினத் தலைதூக்கலுக்குத் தம்மை முழுமையாக- ஈகமாக்கிக் கொண்டு, ஒப்புக் கொடுக்கும் நாளே, தமிழினம் தலைநிமிரும் நாளாகும்! ஆனால், இன்றைய தமிழக நிலை அவ்வாறு இருக்கிறது. தமிழ், தமிழினம் என்னும் மறைமொழி தவிர, வேறு முதன்மையும் எந்தத் தமிழினத் தலைவரிடத்தும் எள் முனை அளவும் தலைதூக்கக் கூடாதென்பேன்... தமிழினம் தலைதூக்க, தமிழ்நாட்டை முழு இறைமையுடைய தனி நாடாகப் பிரித்துத் தமிழரே ஆளுமை செய்வதேயாகும்.

வெ. கோ. கன்னியப்பன், அம்பர்நாத்

13. தமிழரின் வேட்கை தனித்தமிழ்த் தாயகம்!

அய்யா அவர்கட்கு வணக்கம். மாநாடு சிறப்புற நடைபெற என்னாலியன்ற சிறு தொகையான உரு. 30-ஐ உள்ளன்போடு அனுப்பி உள்ளேன்.

“தமிழரின் வேட்கை தனித்தமிழ்த் தாயகம்” - என்னுடைய ஒப்போலையைத் தமிழ் நாட்டை முழு இறைமையுடைய தனி நாடாகப் பிரித்துத் தமிழரே ஆளுமை செய்வது -என்ற கொள்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்! இந் நில உருண்டையில் தமிழனுக்கென்று பொதுமைப் பூங்கா வேண்டும்; அது மலரும் ஈழமாகவோ அல்லது தமிழ்நாடாகவோ இருக்கட்டும்!

மு. உலகமுதல்வன், க மு.
திருவண்ணாமலை, (தொடரும்)

உ. த. மு. க. செய்தி

குளத்தூர்-புதுகை மாவட்டம்

தமிழின மேம்பாட்டுக் கலந்துரையாடல்

தி.பி. 2017 நளி 12-ஆம் பக்கல் (22-11-86) வெள்ளிக்கிழமை கீரனூர் நெடுநாளைய தென்மொழியன்பர் மங்கலம் பொன்னிறைவன் அவர்கள் இல்லத்தில் இரவு 9 மணியளவில் தமிழின மேம்பாட்டுக் கலந்துரையாடல் நிகழ்ச்சி புலவர் திருக்குறள் நாவை. சிவம் (மணவை வட்ட உ. த. மு. க. செயலர்) அவர்கள் தலைமையில் தொடங்கியது. தமிழ்த்திரு குழந்தை. ஈகவரசன் (திருச்சி மாவட்ட உ. த. மு. க. பொருளர்) ‘அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே’ என்னும் பாவலரேறு ஐயா அவர்களின் பாடலை தமிழன்னை வாழ்த்துப்பாடலாக இனிமை பொங்கப் பாடினார்.

உ. த. மு. க. துணைப்பொதுச் செயலர் கு. தென்னவன்கோ அவர்களையும் மணவை வட்ட உ. த. மு. க! திருக்குறள் நாவை சிவம் அவர்களையும் திருச்சி மாவட்ட பொருளாளர் குழந்தை ஈகவரசன் அவர்களையும் ஆர்வமுடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தென்மொழியன்பர்கள் அனைவரையும் வருக வருக என்று குளத்தூர் உ. த. மு. க. வட்டச் செயலர் சி. செ. வாணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் தம் முன்னுரையில் திருக்குறளின் சிறப்புப் பற்றியும், உ. த. மு. க. வின் கொள்கைகள் பற்றியும் தமக்கே உரித்தான நடையில் அருவியென சொற்பொழிவாற்றிய தன்மை கேட்போர் மனங் கொள்ளுமாறு அமைந்திருந்தது.

உறுப்பினர்கள் திருக்குறளைச் சொல்லி தம்மை அறிமுகம் செய்து கொண்டனர். திருக்குறள் நாவை. சிவம், குழந்தை ஈகவரசன், பொன்னிறைவன், மா. இலக்குமணன், ச. இராமதாசு, ப. தங்கவேலு, செல்ல. கணேசன், கி. பெருமாள், வி. மாரிமுத்து, தா. நெடுஞ்செழியன், த. அம்பலவாணன், வீ. பெரியசாமி, வே. பால்ராசு, மா. ஆறுமுகம், த. அப்பாவு, பிரகதம்பாள், செ. சந்தரம்பாள், த திருமாவளவன், ப. பன்னீர்செல்வம், அ. லோகநாதன். ஆகியோர் கலந்து கொண்டனர். தாய்மார்களும் சிறுவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்,

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலர் கு. தென்னவன்கோ க.மு. 2-30 மணிநேரம் சொற்பெருக்காற்றினார். உலகின் தோற்றம், மாந்தனின் தோற்றம், தமிழின் தோற்றம் ஆகியவற்றை விளக்கியதோடு தமிழ் ஓர் இயற்கை அறிவியல் மொழி என்றும் ‘எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே,— தொல்காப்பியம்’ விளக்கினார். 3000 மொழிகள்- 300 பிரிவு-3-குலம் அசைப்புறச் சான்றுகளுடன விளக்கினார்.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட அன்பர்களின் வினாக்களுக்கு தென்னவன்கோ அயராது விளக்கம் அளித்தார். நள்ளிரவு 2 30 மணியளவில் நிகழ்ச்சி முடிவுற்றது குளத்தூர் வட்டப் பொருளர் மா. இலக்குவன் தம் இல்லில் நிகழ்ச்சி நடத்த இசைவு அளித்து இன்முகம் காட்டி அறுசுவை உணவளித்த மாச்சலம் பொன்னிறைவன் இணையருக்கும், நிகழ்ச்சியின் தலைவருக்கும், உ. த. மு. க. துணைப் பொதுச் செயலருக்கும், கலந்து கொண்ட அனைவருக்கும் அன்பு நிறைந்த நன்றி கூறினார். செய்தி—சி. செ. வாணன்

செயலர், உ. த. மு. க. குளத்தூர் வட்டம் புதுக்கோட்டை.

தமிழ் மக்கள் தீர்ப்பு - தமிழக விடுதலை!

தமிழ் நிலம்

(தொகுதி-4) இதழ் எண்-78 (11-1-1987) (பகுதி 34-37)

முதலமைச்சரின் அடக்குமுறை கொடுமையானது; பழிவாங்குவது!

இந்தியெதிர்ப்புப் போராட்டம் ஆளுங்கட்சியான அ. தி. மு. க. வும் ஏற்றுக் கொண்ட போராட்டம். அப் போராட்ட உணர்வு தங்களுக்கும் உண்டு என்று காட்டுவதற்கே பொய்யாகவோ, உண்மையாகவோ, ஒரு வரலாற்றுச் சிறப்புடைய தீர்மானத்தையும் சட்டமன்றத்தில் இயற்றச் செய்தார், அதன் முதலமைச்சரான மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரனார்.

ஆனால் இது தில்லிக்கு வால்காட்டும் கண்துடைப்பே என்பதைத் தி. மு. க. நடத்தும் போராட்டத்தை அவர் அணுகிய கொடுமையான நடைமுறை காட்டி விட்டது. அவர் தி. மு. க. இந்தியெதிர்ப்புப் போராட்ட வீரர்களையோ, அதன் தலைவராகிய கலைஞர் கருணாநிதியையோ, இன்னும் அவரோடொத்த தலைவர்களையோ, சிறைப்பிடித்ததை நாம் குறையாகவோ குற்றமாகவோ கூற முன்வரவில்லை. அஃது அவரின் அரசியல் கடப்பாடு என்பதாகவே கருதிக் கொள்வோம். ஆனால் அவர்கள் வெறுமனே சிறைப்பிடிக்கப் பட்டார்களா? இல்லையே!

காவலர்கள்தாம் எத்துணைக் கொடுமையாக நடந்து கொண்டனர்! அவர்கள் ஏற்றிருக்கும் 'காவலர்கள்' என்னும் பொறுப்பிற்கும் புறம்பாக, மக்களை விலங்குகளைப் போல, கண்களை மூடிக் கொண்டு தாக்கியிருக்கிறார்கள்! மண்டைகளைப் பிளந்து இருக்கிறார்கள். இஃது அவர்களின் நடைமுறைக்கு மிகவும் கேடானது. காவலர்கள் தடியால் அவர்களை அடித்திருக்கிறார்கள் என்றால், முதலமைச்சரோ சொல்லால் அடித்திருக்கிறார்.

போராட்டக்காரர்களைக் 'கருணாநிதியின் ஆட்கள்' என்று குறிப்பிடுவது, கருணாநிதியை 'அடியவன்' அல்லது அ. தி. மு. க. வில் உள்ள சாராயக்கடை முதலாளிய 'அரம்பர்' (ரௌடி) என்றும், அவர் கட்சிப் போராளிகளை 'அடியாட்கள்' என்றுமே மறைமுகமாகக் குறிப்பிடுவதாகப் பொருள் தரும் குற்றச் சாட்டு. அவ்வாறானால் அ. தி. மு. க. வில் உள்ளவர்கள் எல்லாரும் ம. கோ. இரா. (எம். சி. ஆர்.) ஆட்களோ? ஒரு கட்சியில் உள்ளவர்களை அக் கட்சித் தலைவர்களின் 'ஆள்' என்று குறிப்பிடுவது குடியரசு அமைப்பையே இழிவு படுத்துவதாகும்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒரு பொருளுக்கும் சேதம் வராமலும், ஓர் ஆளுக்குமே தீங்கு வராமலும் நடப்பார்கள் என்று எதிர்பார்ப்பதோ, நடக்க வேண்டும் என்று கட்டளையிடுவதோ சரியான முதலாளியக் கோட்பாடு ஆகும். ம. கோ. இரா முதலமைச்சரா, முதலாளியா? ஒரு கொள்கைக்காக அரசை எதிர்த்துப் போராடுகிறவர்கள், காந்தியின் மென்மைப் போராட்டம் போலவே நடத்த வேண்டும் என்றால், ஆளுங்கட்சிக்காரர்கள், வெள்ளைக்காரர்களா என்ன? மேலும் போராட்டத்தை 'வெறியாட்டம்' என்று முதலமைச்சர் இழிவுபடுத்தியிருக்கிறார். "குண்டு வெடியும், உந்து எரிப்புகளும் ஏதோ சூழ்நிலையால் ஏற்பட்டவை அல்ல; திட்டமிட்டுச் செய்தவை" என்கிறார், முதலமைச்சர். திட்டமிடாமல் போராட்டத்தை எப்படிச் செய்வது?

வெள்ளையர்களை எதிர்த்துப் பேராயக் கட்சி நடத்திய தன்னுரிமை (சுதந்திர)ப் போராட்டத்தில் (1942 பம்பாயில் நடந்த பேராயக் கட்சியின் 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்திற்குப் பின்) 192 காவல் நிலையங்கள் அழிக்கப்பட்டன; 31? தொடர்வண்டி நிலையங்கள் தகர்க்கப் பட்டன; 102 தொடர் வண்டிப் பாதைகள் பெயர்க்கப் பட்டன; 49 அரசு அலுவலகங்கள் வெடிவைத்துச் சிதைக்கப் பட்டன; 309 அஞ்சல், தொலைவரி நிலையங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன; 11815 இடங்களில் உள்ள மின்கம்பிகள் அறுக்கப் பட்டன; இவற்றுக்காக 538 துமுக்கி(துப்பாக்கி)ச் சூடுகள் நடந்தன. 604 பேர் துமுக்கிச் சூட்டில் இறந்தனர்; 1630 பேர் படுகாயம் அடைந்தனர்; 6229 பேர் சிறைப்படுத்தப்பட்டனர்; அதிகாரமற்ற செய்திகளின்படி 2500 பேர் இறந்தனர்; அல்லது காணாமல் போயினர். இவையெல்லாம் வெறியாட்டங்கள், அல்லது வன்முறைகள் (முதலமைச்சர் கருத்துப்படி) ஆகாவோ?

இனி, இத்தனை விளைவுகளும் காந்தியினால்தான், அவர் தூண்டிவிட்டுத்தான் ஏற்பட்டன என்று அன்று வெள்ளைக்காரன் குற்றஞ் சாட்டவும் இல்லை; இழிவு படுத்தவுமில்லை. போராட்டம் எவரானாலே அப்படித்தான் (அவரின் வரலாற்றுத் திரைப்படங்களில் வேண்டுமானால் அவர் செய்த போராட்டங்கள் வேறு வகையாக இருக்கலாம்.) இனி, இப்புள்ளி விளக்கத்திலிருந்து ஒரு செய்தியை நாம் இங்குக் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. அத் தன்னுரிமைப் போராட்டங்களில் சிறைப்பட்டவர்கள் வெறும் 6229 பேர்கள்தாம்; இன்று இந்தியெதிர்ப்புக்காகச் சட்டத்தை எரித்துவிட்டுச் சிறை சென்றிருப்பவர்கள் இருபதினாயிரத்திற்கும் மேல். இவர்களெல்லாரும் கருணாநிதிக்காக மட்டும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்லி இழிவு படுத்திவிட முடியாது. அவ்வாறு சொல்லவும் கூடாது. அது நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வது போல் ஆகிவிடும். இந்தி இந்தத் தமிழ் மண்ணில் கால் வைக்கக் கூடாது என்பதற்காகவும், தமிழுக்காக நாங்கள் எதையும் செய்யப் பின்வாங்க மாட்டோம் என்னும்

(தொடர்ச்சி 3-ஆம் பத்தி பார்க்க)

அன்பர்கள் கவனிக்கவும்!

தாங்க முடியாத தாள், அச்சுப் பொருள்கள் விலை ஏற்றத்தாலும், திடுமென அரசு உயர்த்திய முப்படி அஞ்சல் கட்டணங்களாலும், இவ்விதழ்கள் முதற்கொண்டு தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களின் விலையைத் தவிர்க்க முடியாமல் கூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே சனவரி மாதம் முதல் விலைகளும் உறுப்பினர் கட்டணங்களும் கீழுள்ளவாறு மாற்றி அமைக்கப் பெறுகின்றன. அன்பர்கள் இக்கூடுதல் விலையைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஆதரவு தர வேண்டிக்கொள்கிறோம்.

	தனி இதழ்	ஆண்டுக்கு	அரையாண்டுக்கு
தென்மொழி :	1 75	20·00	10·00
தமிழ்ச்சிட்டு :	0·75	9 00	இல்லை
தமிழ்நிலம் :	0·85	44·00	22·00

முன்னரே உறுப்பினர் கட்டணம் விடுத்துள்ளவர்களுக்கு இதழ்கள் கணக்கிட்டு விடுக்கப் பெறும். வெளிநாட்டுக் கட்டணங்களை எழுதித் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

—அமைச்சர்.

திபி 2017, சிலை,12,13 (காரி, ஞாயிறு) [1986 திசம்பர் 27, 28] ஆகிய நாள்களில் சென்னை, பெரியார் திடலில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் நடத்திய,

கருத்தரங்கு செய்திச் சுருக்கம்

(நம் சிறப்புச் செய்தியாளர் : அசென்.)

தமிழினம்! இதற்குத்தான் எத்துணைப் பெருமைகள் இருந்தன! வாழ்வியல் கூறுகளிலும் கலை, அறிவியல், பண்பாட்டுக் கூறுகளிலும் இது பெற்றிருந்த உயர்நிலைதான் எத்தகையது! ஞாலத்தின் பிறகுதி மக்கள் யாவரும் வியந்து போற்றிப் பின்பற்றும் வண்ணம் உயர்தனிச் செம்மொழி வழங்கியும், உயர்தனி நாகரிகப் பண்பாட்டு நிலை விளங்கியும் வாழ்வாங்கு வாழ வையகத்துக்கு வழி காட்டியதன்றோ இவ் வருமைத் தமிழினம்!

இயைந்து கலந்து இன்ப நலங்கள் துய்த்துப் பின் இரண்டகம் செய்தவரின் சூழ்ச்சியால் இவ்வினத்திற்கு வீழ்ச்சி! எண்ணியும் பார்க்கவியலாத் தாழ்ச்சி!

ஒரு வழியிலா? இரு வழியிலா? எல்லா வழிகளிலும் எல்லா நிலைகளிலும் தன் நிலை மறந்து நலம் துறந்து நலிந்து கேடுற்று நைந்துபோன இத் தமிழகத்தின் வளமும் வாழ்வும் மீள்வது என்றோ? மீட்பது யாரோ?

ஆரியப் பேய் தின்று ஏப்பமிடத் துடிக்கும் இத் தமிழினத்தை - இதன் இனிய தமிழ் மொழியை - இதன் வாழ்நிலத்தை - மீட்கும் வழிதான் யாதோ?

தம்மை யறியாது - தம்மினத்தின் முன்னைய உயர்வையும் பின்னைய தாழ்வையும் உணராது சேற்றுள் உழலும் புழுக்கள் போலத் தம் வயிற்றுக்கே வாழ்ந்து சாகும் இத் தமிழ் மக்களின் தன்மான மீட்புக்கும் தனியுரிமைவாழ்வுக்கும் பாடுபட்ட தனிப் பெருந்திறலார் தந்தை பெரியார் அவர்களே.

அடிமையிருளையும் அறியாமையிருளையும் நீக்க வந்த அப் பகலவனின் ஒளியும் பயனற்றுப் போன நிலையில் - அறியாமையும் மிடிமையும் சூழ்ந்து, எண்ணத் தெரியாமலும், எண்ணினாலும் இயங்கத் தெரியாமலும் இயங்க முயன்றாலும் அடுத்தூன்றி முன்செல்ல முடியாமலும் தவித்திருக்கும் தமிழினத்தின் எதிர்காலம் எப்படி ஆகுமோ என்று அன்புத் தமிழ் நெஞ்சங்கள் அலைமோதும் வேளையில் தென்புற்றார் தமிழரெனச் செப்பும் வகையில் தோன்றியதுதான் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

தந்தை பெரியாரின் தனிப்பெரும் ஒரே கொள்கையான 'தமிழ்நில விடுதலை'யினைத் தொடர்ந்து செயல்படுத்த முனைந்து முன்வந்து முழக்கம் செய்தோரெல்லாம், மூச்சடங்கிப் பேச்சடங்கி மூலையிலே முடங்கிவிட்ட அல்லது ஒதுங்கிவிட்ட காலக் கட்டம் இது.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் வெற்று வாய்ப்பறை கூட ஓய்ந்து போன காலம் இது.

ஒட்டுமொத்தமான விடிவைக் கூறுவதற்கும் அதை நோக்கிப் போவதற்கும் அஞ்சி வாய்மூடிக் கொண்டு - அதை வெளிக்காட்டாமல் மறைக்கும் வண்ணம், தமிழினத்துக்கு நேர்ந்த தாழ்ச்சி வீழ்ச்சிகளுள் எவையேனும் ஒன்றிரண்டை இழுத்துப் போட்டுக் கொண்டு போராட்டம், ஊர்வலம், மாநாடு என வெற்று உலாவும், வீண் முழக்கமும் ஆக வெற்றி உலா வந்து, தொண்டர்களின் தினவுகளுக்கு ஏதோ ஒரு வகையில் சொறிந்து கொடுக்கும் தலைவர்களும் வழிகாட்டிகளும் நிறைந்துவிட்ட தமிழ் நாட்டில்--

'விடுதலை' என்ற சொல்லை எண்ணிப் பார்க்கக் கூட அஞ்சி நடுங்கும் கோழைகள் குவிந்துவிட்ட நிலையில்--

தமிழ்நாட்டு விடுதலையினையே உயிர் மூச்சாகக் கொண்டு அச்சமின்றி வெளிப்படையாகவே கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக எழுதியும் பேசியும் இயங்கியும் வருபவர் வெந்திறல் அறிவினர், உ. த. மு. க. முதல் வினையாளர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ஆவர்.

அரசின் கண்டிப்புகள் அவரின் கொள்கையுரத்தைச் சிறிதேனும் அசைத்துவிடவில்லை. 'மாய்ந்திடல் வரைக்கும் உரைப்பேன் உழைப்பேன் மக்களுக்கே' எனச் சூளுரைத்துக் காழ்த்த நெஞ்சக்கயவர்தம் காரறிவுப் போங்குகளைப் பொருட்படுத்தாமல், திண்மை நெஞ்சுடனே செயலாற்றும் அவரின் தலைமையில் இயங்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், இன்றைய நிலையில் தமிழின விடிவுக்கு- அதன் எதிர்கால நல்வாழ்வுக்கு- என்ன செய்யலாம்? அதை எப்படிச் செய்யலாம்? என்று தீர்மானிக்கும் பொருட்டுக் கூட்டப்பெற்றதே "தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு."

'தமிழக மக்களின் நல்வாழ்வே தம் குறிக்கோள், எனக் கூறி வந்தாலும், தம்முள் எண்ணற்ற கருத்து வேறுபாடுகளைக் கைக்கொண்டு திரியும் பல்வேறு குழுக்களும் தங்கள் கருத்து எதுவாக இருப்பினும் அதனை மக்கள் முன்னிலையில் எடுத்துக் கூறி விளக்கி மக்கள் கருத்தை - அவர்தம் ஒப்புதலை - அறிய நனி சிறந்த வாய்ப்பு அளிக்கப் பெற்றது. இக் கருத்தரங்கின் பெருஞ்சிறப்பாகும். இது போலும் நடைமுறை வேறெந்த இயக்கமும் அல்லது கட்சியும் கடைப்பிடித்திராத ஒன்றாகும்.

(தொடரும்)

(முதல் பத்தித் தொடர்ச்சி)

உறுதியைத் தெரிவிப்பதற்காகவுமே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று இராசீவுக்குச் செவிட்டில் அறைந்தது போல் பெருமைப் படுத்திச் சொல்லியிருக்க வேண்டும், முதலமைச்சர். ஆனால் அவர் இழிவுபடுத்தி விட்டாரே!

தமிழ்மக்களில் தேர்தல் வெற்றிக்குத் தேவையான, பகுத்தறிவின்மையும் அறியாமையும் திரைப்படக்கவர்ச்சியுணர்வும் கொண்ட, கணிசமான மக்கள் (பெரும்பான்மையான மக்கள் நாட்டு நிலைமைப் படி அப்படித்தானே உள்ளனர்!) தம்மை முதலமைச்சராக ஆக்கி வைத்து விட்டனர் என்பதற்காகவே, இங்குள்ள அனைத்துத் தமிழர்களையுமே இளித்தவாய்த் தமிழர்கள் என்றே ம. கோ. இரா. எண்ணி விட்டார் போலும்! தமிழகத்தில் உள்ள அ. தி. மு. க. விலுள்ள ம. கோ. இராவின் ஆட்கள்(!) (அவர் கணக்குப்படி) போக மீதியுள்ள உண்மைத் தமிழுணர்வாளர்களாக இருந்து இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அனைவருமே கருணாநிதி ஆட்களாக, அவர் கறுப்புக் கண்ணாடிக் கண்களுக்குத் தெரிகின்றார்களோ?

அப்படியானால் அவர் கட்சியில் உள்ள இந்தியெதிர்ப்புணர்வாளர்களும் (அவ்வாறு உண்மையிலேயே இருப்பார்களானால் அவர்களும்) கூட, கருணாநிதி ஆட்களோ? இந்த வகையில் அவர் நிலையும் கொடுமை! அவர் காவலர்களைக் கொண்டு செய்யும் செயலும் கொடுமை! 'நிலைமை அப்படித்தான் உள்ளது; அதற்குத் தக, தாம் எடுக்கும் சட்ட நடவடிக்கை கொடுமையாகாது' என்று அவர் சொல்வாரானால், அவர் உள்ளத்தில் இருப்பது, கருணாநிதியைப் பழி வாங்க வேண்டும் என்னும் அரத்த வெறிக்குச் சமமான பழியுணர்வு என்பதையேனும், அவர் வாய் ஒப்பாது; மனம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இறுதியாக முதலமைச்சருக்குச் சொல்கின்றோம்! இப்பொழுதாவது தமிழகத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் குண்டுகள் வெடிக்கின்ற (அது யார் வைத்து வெடித்தாலும் சரி.) காட்சிகளைப் பார்க்கின்றோம். இனிமேல் அனைத்து இடங்களிலுமே வெடிக்கின்ற காலம் ஒன்று விரைவில் வரலாம்! அதற்கும் கருணாநிதி ஆட்கள்தாம் காரணம் என்று முதலமைச்சர் கூறிவிட முடியாது! ஏனெனில் அப்பொழுது அவர்கள் முதலமைச்சர் ஆட்களாகவே இருந்தாலும் இருக்கலாம். அவர்கள் கூட எப்பொழுதும் திரைப்படக் கவர்ச்சியுள்ளவர்களாகவே இருந்துவிட முடியாதன்றோ? ஆனால், அப்படியொரு நாள் வருகின்ற பொழுது முதலமைச்சர் எங்கு இருப்பாரோ, இப்பொழுது கூறமுடியாது!

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் நிகழ்ந்த விளைவுக் கேடுகளையே மேலே காணும் புள்ளி விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன. குடும்ப வாழ்வின் அடிப்படையே முழுவதுமாகச் சிதைந்து விட்ட நிலையில் இன்று அவர்கள் செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர்.

எடுத்ததற்கெல்லாம் அமெரிக்காவையும், உருசியாவையும் பார்த்து அப்படியே பின்பற்றிப் பழகிவிட்ட வளரும் நாடுகளின் போக்குக்கு இச் செய்தி மிகவும் கவலைக் குரியதாகும். பெண்ணுரிமை குறித்த வறட்டு முழக்கம், ஆடைப்புனைவுகள், நாகரிக நடைமுறை, அம்மணக் கவர்ச்சி, மக்கள் தொடர்புக் கருவிகளின் சீரழிந்த போக்கு இவை காரணமாக முன்னேறிய நாடுகள் மாந்த நாகரிகத்தையே குழி தோண்டிப் புதைக்கும் அளவிற்கு இன்று விரைந்து கொண்டிருக்கின்றன.

முன்னேறிய நாடுகளின் வழி காட்டுதலை முழுவதுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்பதன்று நமது தருக்கம். பல துறைகளில் அவர்கள் அடைந்துள்ள மேல் விளைவை அறிவியல் வளர்ச்சி, எந்திர மாந்தவியல் முன்னேற்றம் (ROBOTIX), விண்வெளி அணு ஆய்வு, ஆழ்கடல் ஆய்வு விரைவுப் போக்குவரத்து, சுற்றுப்புறத் தூய்மை, பொறியியல் மின்னணுவியல், மருத்துவத்துறை முன்னேற்றங்களை வளரும் நாடுகளும் அதே பாணியில் எட்டிப் பிடிக்க முயல வேண்டும்.

—நன்றி சமரசம் - திசம்'86

கலைஞரைப் பகையாகக் கருதாதீர்கள்!

உரிமைமீட்புப் போராட்டங்களில் புதுமை செய்த புரட்சிப் பெண்கள்!

1. தென் ஆப்பிரிக்க விடுதலைப்போராளி 'டொரத்திநயம்பே.'

தென் ஆப்பிரிக்காவில் உள்ள நேட்டாளில் 1930-ஆம் ஆண்டு பிறந்தவர் டொரத்திநயம்பே. இவர் தம் இளமைக் காலங்களிலேயே தென் ஆப்பிரிக்க இனவெறி அரசின் நயன்மையற்ற சட்டங்களை எதிர்த்துப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார். இதனால் இளமையிலேயே இரண்டு முறை சிறைத்தண்டனையும் ஏற்றார். தம்முடைய 22 அகவையில் ஆப்பிரிக்கத்தேசியப் பேராயத்தில் இணைந்துக் கொண்டு, பெரும் போராட்டங்களில் பங்கு கொண்டு, பெண்கள் இயக்கத்திலேயே தமக்கென ஒரு தகுதியை வளர்த்துக் கொண்டார். இதன் விளைவாக நேட்டாள் பெண்கள் இயக்கத் தலைவர்களில் ஒருவராகச் சிறப்புற்று விளங்கினார்.

டொரத்தி பலமுறை சிறைசென்று உயிர்த்தொல்லைகளுக்குட்பட்டு வந்திருக்கிறார். 1968 ஆம் ஆண்டு கொரிலா போராளிகளுக்குப் புகலிடம் தந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொடுமையாளர்கள் தடுப்புச்சட்டத்தின் கீழ் தளைப்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையை ஏற்று 3? அகவையில் சிறைப்பட்டு, 54-ஆவது அகவையுடைய முதியவராகவே வெளிவந்தார். தென் ஆப்பிரிக்க விடுதலைப் பெண் போராளிகளில் இவரே தலைசிறந்தவராக விளங்குவதோடு பல்லாயிரக்கணக்கான போராளிகளை உருவாக்கவும் இவர் முன்னோடியாக விளங்கினார்.

2. நிகரகுவா விடுதலைப் போராளி "லூயிசா"

நிகரகுவாவில் ஒரு குடும்பத்தில் 1950-ஆம் ஆண்டு பிறந்தவள் லூயிசா எனும் வீரப் பெண்மணி. லூயிசா தம் இளம் அகவையில் உணவுக்குக்கூட வழியின்றி மிகவும் தொல்லைப்பட்டுத் தம்முடைய உறவினர்கள் சார்பில் வாழ்ந்து, பின் அவர்களின் கொடுமையையும் தாங்காமல் திரும்பவும் தெருக்களில் 'பான'வணிகம் செய்தும் பிழைத்து வந்தார். பின் 1960 ஆண்டுகளில் புரட்சி வழிப் போராட்டங்களினால் உந்தப்பட்டுக் கொரிலாப்படையில் சேர்ந்தார். லூயிசா கொரிலாப்படையில் சேரும் பொழுது, அவ்வியக்கத்தில் விரல்விட்டு எண்ணத் தக்க அளவில்தான் பெண்கள் ஈடுபட்டிருந்தனர். எனினும் லூயிசா இயக்கத்திற்கு வீரர்களைத்திரட்டுவதிலும் இயக்கக்கொள்கைகளை மக்கள்நடுவே பரப்புவதிலேயும் மிகவும் முனைப்பாகச் செயல்பட்டுப் பின்னர் தாமே ஒரு போராளியாகப் போராட்டங்களில் ஈடுபட்டார். 1971-ஆம் ஆண்டு தலைநகரில் படைத்துறையினரைச் சுற்றுவளைத்து அதிரடித் தாக்குதல் நடத்தும்போது மிகத் துணிவுடன் எதிர் நின்று போரிட்டு இறுதிவரை பலரைக் கொன்று குவித்துவிட்டுத், தாமும் அந்தப் போரிலேயே மாண்டு போனார். லூயிசாவின் இத் துணிவான போராட்டத்தின் எதிரொலியாகத்தான் ஆயிரக் கணக்கான பெண்கள் நிகரகுவா விடுதலை இயக்கத்தில் இணைந்தனர். இன்று அந்நாட்டுப் பெண் போராளி இயக்கத்தின் பெயரிலேயே லூயிசா பெயர் இணைக்கப்பெற்று, லூயிசா அமாண்டா எசுபினோசா பெண்கள் இயக்கம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

3. வின்னி மாண்டலோ (தென் ஆப்பிரிக்கா)

தென்னாப்பிரிக்கா விடுதலைக்காகப் போரிட்டு 23 ஆண்டுகளாகச் சிறையிலிருக்கும் கருப்பு இனத் தலைவர் நெல்சன் மாண்டலோவின் வாழ்க்கைத் துணைவியார்தாம் வின்னி மாண்டலோ. தலைவர் நெல்சன் மாண்டலோ சிறையில் இருப்பதால் விடுதலை இயக்கத்தை எந்த வகையில் முறையான செயல் திட்டங்களை வகுத்தளித்து வழி நடத்திச் செல்வாரோ, அதே முறையில் வின்னி மாண்டலோ வழி நடத்தி வருகிறார்.

நெல்சன் மாண்டலோவின் துணைவியார் என்பதாலும், இயக்க முன்னணித் தலைவர் என்பதாலும் வின்னி மாண்டலோவிற்கு நிறவெறியரசு பல தாங்கவொண்ணாக் கொடுமைகளைச் செய்து பலமுறை சிறையில் அடைத்து அவர் இயக்கப் பணிகளில் ஈடுபடாத முறையில் தடைகளைக் கொடுத்து வந்தபோதும் வின்னி மாண்டலோ சிறிதும் கலங்காமலும், தயங்காமலும் மிகப் பொறுமையோடும், முறையான செயல்முறைத் திட்டங்களோடும், கடமையுணர்ச்சியோடும், வலுவான நெஞ்சத் துணிவான மறத்தன்மையோடும், உண்மையான இன நலச் சிந்தனையோடும், அளப்பரிய விடுதலை வேட்கையோடும், அவர் நிறவெறி அரசை எதிர்த்துக் கருப்பு இன மக்களை வழி நடத்திச் செயலாற்றி வரும் திறன் கண்டு உலகே பாராட்டிப் புகழ்கிறது. இருபதாம் நூற்றாண்டில் பெண் குலத்திற்கே பெருமை சேர்த்த பெரும் பெருமை திருவாட்டி. வின்னி மாண்டலோவையே சாரும்.

4. அல்பர்டினாசிசுலு (தென்ஆப்பிரிக்கா!)

இனவெறிக் கொடுமைகள் தலைவிரித்தாடும் தென் ஆப்பிரிக்காவில் கருப்பின மக்கள் விடுதலைக்காகத் தம்மையே அளித்துக் கொண்ட வீரத்தாய் ஒருவர்தாம் அல்பர்டினாசிசுலு. ஆப்பிரிக்கத் தேசியப் பேராயத்தின் பொதுச் செயலாளர் வால்டர் சிசுலுவை அல்பர்டினாசிசுலு திருமணம் செய்து கொண்டார். திருமணமான அன்றே, "கருப்பு இன மக்கள் விடுதலைக்கான போராட்டங்களில் ஈடுபடுகிற ஒருவரைத் திருமணம் செய்துகொள்வதில் யான் மகிழ்ச்சியடைகிறேன்; யானும் அப் போராட்டங்களில் ஈடுபடுவேன்" எனச் சூளுரையாகக் கூறியது, அவர்தம் இனவுணர்வையும், உரிமைமீட்பு வேட்கையையும், இனநலச் சிந்தனையையும், அறிந்து போற்றக் கூடியதாக உள்ளது.

1912-ஆம் ஆண்டில் பிறந்த, அன்னை அல்பர்டினாசிசுலு 5 குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்கிறார். 1953க்கும் 1964க்கும் இடையில் வால்டர் சிசுலுவை (இவருடைய கணவர்) எட்டுமுறை தளைப்படுத்திச் சிறையில் அடைத்திருக்கிறார்கள். அதன்பின் பொய்க் குற்றம் பல சாற்றப்பெற்றுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அக் காலகட்டத்தில் அல்பர்டினாசிசுலு ஏறத்தாழ 17 ஆண்டுகள் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டு மிகவும் கொடுமைகளுக்கு ஆட்பட்டுத் தொல்லைகளை ஏற்றுப் போராடினார்.

அமெரிக்க வலியுறுத்தலின் பேரில் தலைவர்களுடன் வால்டர் சிசுலு 1984-ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார் எனினும் அடுத்த மாதமே மீண்டும் தளைப்படுத்தப்பட்டு இப்போது பிணையில் வெளியே வந்துள்ளார். கணவரும் மனைவியும் ஒவ்வொரு நாளும் விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொள்கிறார். மக்களின் விடுதலைக்காகவே போராடி வருகிற வால்டர் சிசுலு (73 அகவை) அல்பர்டினாசிசுலு(63 அகவை) இணையர் தம் மக்கள் எங்கிருக்கிறார்கள் என்று கூடத் தெரியாமல் தம் இறுதி நாள்களில் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

5. கொரசான் அக்யூனு (பிலிப்பைன்சு)

1965-ஆம் ஆண்டில் இருந்து, அனைத்ததிகார ஆட்சியின் கீழ், சிக்கிச் சீரழிந்து வரும் பிலிப்பைன்சு நாட்டின் மக்கள் விடுதலைக்காகப் போராடி வருபவர் தாம் கொரசான் அக்யூனு. இவரும் இவருடைய கணவர் அக்யூனுவும், வல்லதிகாரக் கொடுங்கோல் ஆட்சி புரிந்து வரும் மார்க்கோசு இமெல்டா இணையரின் ஆட்சியை எதிர்த்து மக்கள் நடத்திவரும் போராட்டங்களை வழி நடத்தி வருகிறார் என்பதை அடக்க எண்ணிய மார்க்கோசு, 1983-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று திரும்பிய அக்யூனுவை வானூர்தி நிலையத்தில் வைத்தே படைத்துறையினரைக் கொண்டு சுட்டுப் படுகொலை செய்து விட்டார். இதைக் கண்டித்து மக்கள் பெருமளவில் போராட்டங்களில் ஈடுபடலாயினர். பிலிப்பைன்சில் சரியான எதிர்க்கட்சிகள் இல்லாமல் இருந்ததால் சிறுசிறு கட்சிகளையெல்லாம் இணைத்துத் தன்னதிகாரத்திற்கு எதிராகக் கொரசான அக்யூனு ஒன்று திரட்டிப் போராடி வந்தார்.

நீண்டகாலமாக, அனைத்ததிகாரி மார்க்கோசுவிற்கு எதிராகக் கொரில்லாத் தாக்குதல் நடத்திய மார்க்சிய பொதுவுடைமை இயக்கங்களைச் சார்ந்த இளைஞர்கள் கொரசான அக்யூனுவிற்கு மிகுந்த ஒத்துழைப்புக் கொடுத்தனர். ஊனும் தலைவர்கள் பலர் பிலிப்பைன்சு சிறைகளில் வாடிக்கிடந்தனர். 1983 - ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட அக்யூனுவின் கொலை வழக்கு அண்மையில் தீர்ப்புக் கூறப்பட்டது. கொலை வழக்கில் குற்றவாளிகள் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. இதனையடுத்துத் திடுமெனக் குடியரசுத் தலைவர் தேர்தலை வைத்திருந்தார் மார்க்கோசு. தேர்தலில் அந்நாட்டு மக்கள் தலைவியான கொரசான் அக்யூனு எதிர்க்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்டு வென்றார். மக்கள் விடுதலைக்கான போராட்டத்திற்கான களத்திலே கணவனைப் பறிகொடுத்த கொரசான் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் புரட்சிக்குத் தலைமை தாங்கிய கொரசானை வீரத்திருமகளாக அந்நாட்டு மக்கள் கருதுகிறார்கள்.

6. பெனசிர் புட்டோ

பாக்கித்தான் குடியரசுத் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாபெரும் தலைவர் புட்டோவின் மகள்தாம் பெனசிர் புட்டோ. 1977-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் புட்டோ வெளிநாடுகளில் சுற்றுச் செலவு மேற்கொண்டு பயணம் செய்யும் வேளையில் ஆட்சியைக் கவிழ்த்து நாட்டில் இருந்த அரசியல் தலைவர்கள் எல்லோரையும் தளைப்படுத்திச் சிறையில் அடைத்துவிட்டு, தம்மைத்தாமே குடியரசுத்தலைவராக நிறுவிக் கொண்டு விட்டவர் தாம் சியா-வுல்-அக். பின்பு புட்டோ கொலைக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனையும் கொடுக்கப்பட்டு, 1979-ஏப்பிரல் மாதம், பன்னாட்டுத் தலைவர்களின் கோரிக்கைகளையும் தள்ளிவிட்டுத் தூக்கிலிட்டுக் கொலை செய்யப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை அனைத்ததிகாரியாக ஆட்சி செய்து வருகிறார் சியா-வுல்-அக்.

சியா-வுல்-அக்கை எதிர்த்து, மக்களைத் திரட்டிக் கடுமையான போராட்டங்களை மிகத் துணிவுடன் நடத்தி வருகிறார் 32 அகவையேயுள்ள இளம் பெண் பெனசிர் புட்டோ. சென்ற சூலை மாதம் பெனசிர்புட்டோவின் தம்பி சாநாவாசு பிரான்சு நாட்டில் வைத்து சியா-வுல்-அக்கின் தூண்டுதலின் பேரில் படுகொலை செய்யப்பட்டார். இறந்துபோன தம்பியைத் தமது சொந்த ஊரில் நல்லடக்கம் செய்ய வேண்டுமெனவும் பிரான்சிலிருந்து தம்பியின் உடலை எடுத்துக்கொண்டு பாக்கித்தான் வர வேண்டுமெனவும் இசைவு கேட்டார் பெனசிர். ஆனால் இசைவு மறுக்கப் பட்டது. பின்பு அரசின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் தாமே தம்பியின் உடலை எடுத்துக் கொண்டு, பாக்கித்தான் வந்தார். வானூர்தி நிலையத்தில் தடைக்கட்டளைகளையும் மீறிக் கட்டுகடங்காத 75 ஆயிரம் மக்கள் திரண்டு பெனசிர் வருகைக்காகவும், சாநாவாசு உடலைக் காண்பதற்கும் காத்திருந்தார்கள். குழுமியிருந்த மக்கள் ஊர்வலத்தோடு தம்பியின் உடலைச் சொந்த ஊரான லார்கனாவுக்கு எடுத்து சென்று நல்லடக்கம் செய்தார்.

பெனசிர் புட்டோவைக் கண்ட மக்கள் திடுமென விழித்துக் கொண்டு, பெரும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு, படைத்துறையாட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் அஞ்சிக்கொண்டு சியா-வுல்-அக், பெனசிர் புட்டோவை வீட்டுக்காவலில் வைத்துக் கொடுமை செய்தார். இதனால் சினமடைந்த மக்கள் கிளர்ச்சிகளை மும்முரப்படுத்தினார்கள். இதன் விளைவாகச் சென்ற நவம்பர் மாதம் பெனசிர்புட்டோவைப் பாக்கித்தான் அரசு விடுதலை செய்தது. உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையும் இட்டது. பெனசிர் சுவிட்சர்லாந்து செல்லத் திட்டமிட்டுச் சென்றார். அப்போது ஏராளமான படைத்துறையினர் பெனசிர் வீட்டையும், அவர் வானூர்தி நிலையம் செல்லும் வழிகளையும், வானூர்தி நிலையத்தையும் முற்றுகையிட்டு மக்கள் அவரைச் சந்திக்காமல் தடுத்தனர். எனினும் மக்கள் பெருமளவில் வானூர்தி நிலையத்தில் திரண்டு வழியனுப்பி வைத்தார்கள். தந்தைக்குப் பிறகு பெனசிர்புட்டோ, நாட்டில் மக்களாட்சியை நிறுவ கடுமையான முயற்சிகளைச் செய்து வருகிறார். நாட்டு மக்கள் இவரையே தங்கள் எதிர்காலத் தலைவர் என்று கூறி மகிழ்கிறார்கள். பெனசிர் புட்டோவின் மற்றொரு தம்பியான முர்தாசா என்பவர் தமது தலைமையின் கீழ் ஒரு பெரும் கொரிலாப்படை ஒன்றை அமைத்துத் தமக்கை பெனசிர்க்குச் சார்பாகவும், சியா-வுல்- அக்கிற்கு எதிராகவும் கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறார். கொரிலாப் படையமைப்பின் பெயர் அல்சல்பிகார் முர்தாசா. பெரும்பாலும் வெளிநாடுகளிலே தங்கிப் போர்ப் பயிற்சிகளைப் பெற்றுத் தலைமறைவாகத் தாக்குதல் தொடுத்துவருகிறார். மக்களும் நாளுக்கு நாள் கொதித்தெழுந்துகொண்டிருக்கிறார்கள். இதன் விளைவாகத் தற்போது சியா-வுல்-அக் படைத்துறை ஆட்சிக்கு முடிவு கட்டுவதாக அறிவித்துள்ளார். விரைவில் தேர்தலும் நடக்குமெனவும் கூறியுள்ளார். தேர்தல் நடக்குமானால் அடுத்த குடியரசுத் தலைவர் பெனசிர்புட்டோதான் என்பது உறுதி.

--வியனரசு (தொடரும்)

அமெரிக்காவும், உருசியாவும் ஒழுக்கக் கேடுகளில் ஒன்றுதான்!

-தரமணியார்.

"மணமாகும் நிலையில் உள்ள உங்கள் மகள் கன்னியாக இருப்பதுதேவை என்று தாங்கள் கருதுகிறீர்களா?"

நாடு தழுவிய அளவில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் தொடுக்கப்பட்ட இவ்வினாவிற்கு அமெரிக்கப் பெண்களில் 17 விழுக்காடு மட்டுமே 'ஆம்' என்று பதிலளித்துள்ளார்கள். அமெரிக்காவில் குடும்பவியல் ஒழுக்கம் மிகக் கீழ்மையை அடைந்து விட்டதற்கு இது ஒன்றே போதிய சான்று. தாய்மை அடைந்துள்ள மணமாகாத கன்னிகள் பணிபுரியாமல் அரசு பொருள் உதவி பெறக் கூடிய வகையில் குமுக நலத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் தேசிய உடல்நல அறிக்கை கூறுகிறது:

"1984 ஆம் ஆண்டு மட்டும் இளம் பெண்களில் பத்து இலக்கத்திற்கும் அதிகமானோர் திருமணத்திற்கு முன்னரே கருவுற்று உள்ளனர்.

இத்தகைய பெண்களில் 85 விழுக்காட்டினர் இடையிலேயே பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டனர். உயர்நிலைப் பள்ளி மாணவிகளில் 65 விழுக்காடு பட்டம் பெறுவதற்கு முன்னரே உடலுறவை அறிந்துள்ளனர். 1984-இல் அமெரிக்காவில் 25 விழுக்காடு இல்லறங்களில் இணையரில் ஒருவரே (Single Parent) குடும்பத்தைக் கவனிப்பதாக அந்நாட்டுப் புள்ளி விளக்க அறிக்கை கூறுகிறது.

அந்த அளவுக்கு இல்லறங்களில் உறவுகள் விரிசல் காணத் தொடங்கியுள்ளன. 1990-ஆம் ஆண்டுக்குள் இந்நிலைமை இரட்டிப்பாகிக் கீழடையும் என்று குமுகவியல் அறிஞர்கள் கணித்துள்ளனர். குறிப்பாகத் திருமணத்தின்போது தங்கள் பெண்ணின் கற்பு நெறி குறித்துப் பெற்றோர்கள் அவ்வளவாய்க் கவலைப்படுவதில்லை.

37 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட விரிந்த ஆய்வில் ஒழுக்கமின்மையில் அமெரிக்கா முன்னணியில் இருப்பது தெரிய வந்துள்ளது. கற்பு நெறி ஒழுக்கம் மிகவும் தரங்கெட்டு விட்டதால் அலுவலகப் பதிவேடுகளில் தந்தையின் பெயர் குறிக்கப்படுதல் தேவையற்றது என்று இப்பொழுது கருதப்படுகிறது.

—(SURYA, மார்ச் 86)

ஒழுக்க வீழ்ச்சி மிகுந்து விட்டதால் மூன்று வகையான விளைவுகளுக்கு அமெரிக்கக் குமுகம் ஆட்பட்டு உள்ளது.

(i) மணமாகுமுன்னே தாய்மையடைதல் சட்டத்திற்கு மாறானது அன்று எனும் சிந்தனை பரவலாய் இருக்கிறது.

(ii) பாலியல் கேடுகள், கற்பியல் குற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதால் அவை குறித்த அச்சவுணர்வு முழுவதுமாக அற்றுவிட்டது.

(iii) அண்மைக் காலங்களில் குழந்தைக்கு அன்னை மட்டுமே போதும் என்னும் நிலைமை அதிகரித்து வருவதால் தந்தையின் தேவை ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

டி.பி 2000-க்கிற்கள் தமிழகம் விடிக... பெயரா!

நாம் தமிழரா, இந்தியரா?

மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவன்
மலையாளி!
வங்காளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவன்
வங்காளி!
தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவன்
தெலுங்கன்!
கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவன்
கன்னடியன்
மராத்தியைத் தாய்மொழியாகக் கொண்டவன்
மராட்டியன்!
இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவன்
இந்தியன்!

தமிழன் எப்படி இந்தியனாக முடியும்?

கடந்த 36 ஆண்டுகளாக, எந்த வகையான கேள்வியுமின்றி இந்தியன் என்று ஒத்துக் கொண்டு, எழுதிக் கொண்டு வருகின்றோம்.

எனவேதான் இந்தியா ஒரே நாடு இந்தியாவில் வாழ்பவர்கள், இந்திய தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள், எனவே, இந்தியர்களுக்கு இந்திதான் தேசியமொழி, ஆட்சிமொழி, பயிற்றுமொழி, தொடர்புமொழி என்று ஆகிவிட்டது எப்போதோ.

இப்போது அதை நிலைநாட்ட வருகின்றது, புதிய கல்விக் கொள்கையும் நடுவண் மாதிரிப் பள்ளிகளும்.

இந்தியன் என்று ஒத்துக்கொண்ட பின்பு இந்தியை எதிர்ப்பது என்ன நாயம்?

எனவே முதலில் நாம் தமிழரா? இந்தியரா? என்பதை முடிவு செய்து கொள்வோம்.

வெறும் பதவிப் போட்டிகளில் ஈடுபட்டு, நம்முடைய தேசிய இனம் தமிழ் இனம் தமிழன் என்று எழுதும் உரிமை வேண்டும் என்று கேட்க மறந்த, அல்லது மறைத்த திராவிட இயக்கங்களின் நடைமுறையினால் வந்ததுதான் இந்தி ஆட்சிமொழித் திணிப்பும் புதிய கல்விக் கொள்கையும் நடுவண் மாதிரிப் பள்ளிகளும்.

தமிழன் என்று உணர்கிறோம், ஆனால் எழுத முடியவில்லையே!

இந்தியன் என்று எழுதுகிறோம், ஆனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இதனை அடிமைத்தனம் என்று உணரவுமில்லை.

ஆவணங்களிலும், சான்றிதழ்களிலும், பட்டங்களிலும், வேண்டுகைகளிலும், தேசிய இனம் என்றுள்ள இடத்தில் தமிழன் என்று எழுத வேண்டும் என்ற அடிப்படை உரிமையினைக் கேட்க மறந்ததன் விளைவுதான், இந்தி ஆட்சிமொழித் திணிப்பும் புதிய கல்விக் கொள்கையும் நடுவண் மாதிரிப் பள்ளிகளும்.

கள்ளிக் கோட்டையில் சாமரின் அரசனிடம் வந்திறங்கிய வாசுகோடகாமாவை, இந்தியாவில் இறங்கினான் என்று வெள்ளைப் பாதிரி எழுத, பார்ப்பனர்கள் அதைத் தமிழர்களுக்கு வரலாறாக்கினார்கள்.

வாசுகோடகாமாவும், கிளைவும், இந்தியாவிலா இறங்கினார்கள்? அப்போது இந்தியா என்பது இருந்ததா? என்று கேட்காததன் விளைவுதான், இந்தி ஆட்சிமொழித் திணிப்பும், புதிய கல்விக் கொள்கையும், நடுவண் மாதிரிப் பள்ளிகளும்.

இந்துவாக இருந்தால் இந்தியனாக இருக்க வேண்டும், இந்தியனாக இருந்தால்தான், பார்ப்பனர்கள் பிறவியிலேயே உயர்வுள்ளவர்களாக இருப்பதை நிலைநாட்ட முடியும், என்பதனால், வெள்ளையன் உருவாக்கிய இந்தியாவைப் பார்ப்பனர்கள் வரலாறாக்கிக் கட்டிக் காத்தனர்-காக்கின்றனர்-இனியும் காப்பார்கள்.

இந்துக்கள்தாம் இந்தியர்கள் என்றால், வடநாட்டில் முருகனை ஏன் கடவுளாக வணங்குவதில்லை என்று கேட்காமல், வடநாட்டுக் கடவுள்களைப் போட்டி போட்டுக் கொண்டு வணங்குவதன் விளைவுதான் இந்தி ஆட்சிமொழித் திணிப்பும், புதிய கல்விக் கொள்கையும், நடுவண் மாதிரிப்பள்ளிகளும்.

இந்தியாவை ஆண்ட மன்னர்கள் என்று அசோகரையும், பாபரையும், கனிஷ்கரையும் அக்பரையும், நம்முடைய வரலாறாகப் படிக்கச் சொன்னபோது நாங்கள் ஏன் இதை எங்கள் நாட்டு வரலாறாகப் படிக்க வேண்டுமென்று கேட்டதில்லை, தமிழன்!

கேள்வி கேட்காதது மட்டுமன்று; அவர்கள் வாந்தி எடுத்ததைப் போட்டி போட்டுக் கொண்டு சுவைத்துப் பட்டங்களை வாங்கியது மட்டுமல்லாமல்- வாங்கிய பட்டங்களுக்கு வேலை கொடு- கிடைத்த வேலைக்குச் சம்பளம் கொடு-கொடுத்த சம்பளத்திற்குச் சம்பள உயர்வுகொடு என்ற போராட்டங்களிலேயே மூழ்கியதன் விளைவுதான், இந்தி ஆட்சிமொழித் திணிப்பும், புதிய கல்விக் கொள்கையும், நடுவண் மாதிரிப்பள்ளிகளும்.

போராட்டம் என்பதும், தொழிலாளர் ஒற்றுமை என்பதும் மாற்றத்திற்காகவே என்பதனை மறந்து அல்லது மறைத்துச் சம்பள உர்யவு, வெகுமதி என்பதை மட்டுமே கூறித் தொழிலாளர்களைப் பொது மக்களிடமிருந்து பிரித்த, பொதுவுடைமைக் கட்சிகளால் வந்தவை தாம், இந்தி ஆட்சிமொழித் திணிப்பும் புதிய கல்விக்கொள்கையும், நடுவண் மாதிரிப் பள்ளிகளும்.

தமிழ்நாட்டு அரசு ஊழியர்களே, ஆசிரியர்களே, வங்கி ஊழியர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களே, ஆலைத் தொழிலாளர்களே, மற்றுமுள்ள மாதக் கூலிகளே! வெறும் சம்பள உயர்வுக் கோரிக்கைகளால் மட்டுமே நமது சிக்கல் தீருமா?

நான்காவது சம்பளக் குழுவின் மூலமாகக் கிடைத்த சம்பள உயர்வு கைக்குக் கிடைப்பதற்கு முன்பே, அஞ்சல் கட்டண உயர்வு, தொடர்வண்டிக் கட்டண உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, திரைப்படக் கட்டண உயர்வு வந்துவிட்டன. விலைவாசி உயர்வு சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டது; கையூட்டும் உயர்ந்துவிட்டது.


REPUBLIC OF SINGAPORE
CERTIFICATE OF REGISTRATION OF BIRTH

MALE

JANARDHANAN VILASINI

MALAYALAM

MALAYALAM

SINGAPORE CITIZEN

SINGAPORE

APT BLK 123 MARSILING RISE #07-06
SINGAPORE 2573

INDIAN

TAMIL

MALAYSIAN

MALAYSIA

JANARDHANAN VILASINI

MOTHER

APT BLK 123 MARSILING RISE #07-06
SINGAPORE 2573

FOR OFFICIAL USE

THE CHILD IS A CITIZEN OF SINGAPORE AT THE TIME OF BIRTH

07/05/1986

032320

—இது சிங்கப்பூரில் கொடுக்கப் பெற்ற 'சித்திரன்' என்னும் குழந்தையின் பிறவிச் சான்றிதழ்! இக்குழந்தையின் தந்தை பாலகிருட்டிணன் - தமிழர். தாய் விலாசனி - மலையாளி. ஆனால் இனம் (Race) மொழி (Dialect) என்னுமிடங்களில் பாலகிருட்டிணன் அவர்களுக்கு, இந்தியன் என்றும், தமிழ் என்றும், விலாசினி அவர்களுக்கு மலையாளி என்றும், மலையாளம் என்றும் குறிக்கப்பெற்றுள்ளன. தமிழனுக்கு இனம் எங்கே? இதிலிருந்தே தமிழினம் அழிக்கப்படுகிறது என்பது புலனாகவில்லையா?

வெறும் சம்பள உயர்வுப் போராட்டத்துடன் நம்முடைய குமுகச் சிக்கல்களுக்காகவும் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது.

கல்வியைத் தனியாருக்குத் தாரைவார்க்கவும் ஆசிரியர்கள் வேலையிழக்கவும் கணினி(கம்ப்யூட்டர்) தொலைக்காட்சி, ஒளியிழைப்பெட்டி ஆகியவற்றைப் புகுத்துவதன் மூலம் தமிழ் நாட்டைப் பிற நாடுகள் நேரடியாகச் சுரண்டுவதற்கு வந்துள்ளது, புதிய கல்விக் கொள்கை.

ஆலைத் தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்ப வந்துள்ளது புதிய சவளிக் கொள்கை; வேலை கேட்கும் உரிமையையும், சம்பளம் கேட்கும் உரிமையையும் பறிக்க வந்துள்ளது புதிய பொருளியல் கொள்கை.

படிப்பதற்கு உரிமையில்லை; படித்தால் பட்டம் பெற உரிமையில்லை; பட்டம் பெற்றால் வேலைபெற உரிமையில்லை; வேலை பெற்றால், சம்பளம் கேட்க உரிமையில்லை; ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டில் தமிழன் வாழ்வதற்கே உரிமையில்லை.

'இம்' என்றால் சிறை வாழ்க்கை; 'ஏன்' என்றால் கான் வாழ்க்கை என்ற நிலை வந்துள்ளது, இந்திய அரசின் புதிய புதிய கொள்கைகளால். அத்தனைப் புதிய கொள்கைகளுக்கும் அடிப்படையான, புதிய கல்விக் கொள்கைதான், இன்று தேசியக் கல்விக் கொள்கையாக மாறியுள்ளது.

புதிய கல்விக் கொள்கை இந்தி ஆட்சிமொழித் திணிப்பாக வந்துள்ளது. எனவே புதிய கல்விக் கொள்கையை எதிர்த்திட. இந்தி ஆட்சிமொழித் திணிப்பை எதிர்த்திட.

நம்முடைய தேசிய இனம் தமிழ்த் தேசிய இனம்; நாம் தமிழர் என்று எழுதும் உரிமை வேண்டும்.

தமிழ்த் தேசிய இன உரிமைகளைக் காப்போம் என்று தமிழ் நாட்டுப் பாட்டாளிகளோடு ஒரே குரலாக இணைவோம்.

--தமிழ்நாடு கல்வித் தொழிலாளர் பேரவை.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா உள்ளிட்ட முதலாளிய நாடுகளில் தான் நிலைமை மிகக் கீழடைந்து உள்ளது. ஆனால் இரும்புத்திரை நாடான சோவியத்து உருசியாவைப் பார்த்தால் அங்கும் ஏறக்குறைய இதே நிலைதான்!

சோவியத்து நாட்டு அறிவியல் குழுவின் (Soviet Academy of Sciences)குமுகாய நிலைப் புள்ளி விளக்க மூத்த ஆய்வாளர் விக்டர் ஐ பெரிவிடண்ட் சேவ் (PEREVEDENTSEV) கூறுகிறார்:

"உருசியாவில் இன்று இளம் குடும்பங்கள் கணவன் மனைவி மோதல் நிறைந்து, அமைதியற்று, நிலை குலைந்து உள்ளது."

கட்டுப்பாடு மிகுந்த சோவியத்தின் பல நகரங்களில் மணவிலக்கு விழுக்காடு (Divorce Rate) 50-ஐத் தாண்டிவிட்டது. உரிமைக் குமுக அமைப்புடைய(Free Society)சுவீடன் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட இது கீழானதாகும். பெண்கள் ஆண்களுக்கு நிகராகப் படித்து, உழைத்துக் கொட்டுவதால், இருபுறத்தும் நம்பிக்கையின்மை, ஒழுக்கக் கேடு அதிகரித்துக் குடும்ப அமைதி வெகுவாகக் கெட்டு அன்னையரின் அரவணைப்பிலேயே குழந்தைகள் வளரவேண்டியுள்ளன. சோவியத்துக் குமுகத்தில் ஆண் சாய்கால் குறைந்து விட்டதால் வீட்டிலும் பள்ளியிலும் குழந்தைகள் தந்தையின் வழிகாட்டுதலை, கண்டிப்பை முற்றாக இழந்து வருகிறார்கள்

உடைந்து போகும் குடும்ப உறவுகள், பெருகி வரும் இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை, மிகுந்து வரும் மதுவின் ஆளுமை ஆகியவற்றின் விளைவாக ஒரு பெருங் குமுகச் சிக்கலை சோவியத்து நாடு எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பாக, மதுவின் தீமைகளை நீண்டகாலம் பொருட்படுத்தாமல் போன பின், இப்பொழுதுதாம் எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த சூன் மாதத்தில் முதல் இரண்டு கிழமைகளில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சட்ட எதிரான மது காய்ச்சுபவர்கள் தளை செய்யப்பட்டுள்ளனர் என்று காவல் துறை அறிக்கை கூறுகிறது.

"குளிர்காலம், இளவேனில் காலம், இலையுதிர் காலம் ஆக எந்தக் காலத்திலும் குடியர்களைச் சாலையில் அலையவிட முடியாது" என்று காவல்துறைத் தலைமைத் தளபதி அனடொலி சோரிச் (Anatoli Zhorich)ஒரு கிழமை இதழுக்கு அளித்த நேருரையில் முழங்கியுள்ளார். இப்பொழுது உருசியாவில் பொது இடங்களில் மது அருந்துபவர்களுக்குத் தண்டம் காத்துள்ளது.

வாலைப் பருவத்தின் சிக்கல்களை குறித்து விழிப்புணர்வை ஊட்ட சோவியத்தில் பயிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு,

"இல்லற வாழ்வின் ஒழுக்கவியலும் மனவியலும் (Ethics And Psychology of Family Life)என்ற புதிய கல்வி வகுப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (Caravan. Nov. 11, 1985)

முதலாளியக் கும்பலுக்கு அமெரிக்காவும், நிகரமை(சோசலிச)க் கூச்சலுக்கு உருசியாவும் தலைமை தாங்கியுள்ளன. உலகின் ஏனைய வளரும் நாடுகள் இவ்விரண்டு குழுக்களில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றுவதைத் தமது நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. இத்தகைய நாடுகள் தங்களின் அறிவியல், குமுக, பொருளியல், கல்வி, கலைப்பண்பு வளர்ச்சிக்கு இவ்விரண்டில் ஏதாவது ஒன்றையே பெரிதும் சார்ந்திருப்பதைப் பொறுத்தக் கருத்தைக் கொண்டு, திட்டங்களைத் தீட்டுகின்றன.

முன்னேறிய நாடுகளின் வரிசையில் அமெரிக்கா உருசியா போன்ற நாடுகளின் சிறப்பிடத்தை யாருமே குறைத்து மதிப்பிட இயலாது. ஆனால், இவ்விரு அணிகளும் ஒழுக்கவியலில் ஆழமான பள்ளத் தாக்குகளுக்குச் சென்றுவிட்டன. முதலாளிய மெய்ம்மமும் பொதுவுடைமைக் கருத்தும் கற்பியலுக்கு முகாமையளிக்கத் தவறியதால் அந்த நாடுகளில் வாழும் மக்கள் பாலியல் ஒழுக்கக் கேடுகளைக் குறித்து எள்ளளவும் கவலைப்படுவதில்லை.

கற்புநெறி ஒழுக்கச் செய்தியில் காட்டப்பட்ட புறக்கணிப்பு மனப்பான்மை

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

நாம் தமிழினம் என்னும் உரிமை வேண்டும்!

தமிழகத்தில் தொடர்வண்டித்துறையில் தில்லியரசு கொள்ளையடிக்கும் உருபா ஆண்டுக்கு 800 கோடி!

--கரிகாலன், விரமங்கலம்

18-ஆம் நூற்றாண்டு இறுதியில் ஐரோப்பிய நாடுகளைக் கடுமையாகத் தாக்கிய நெப்போலியனின் போர் 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் முடிவு பெற்றதும், இங்கிலாந்தும் வேறு பல ஐரோப்பிய நாடுகளும் உயிர் மூச்சு விட்டன.

நெப்போலியனின் நீடித்த போர்களால் வீழ்ச்சியுற்ற அந் நாடுகளின் பொருளியல் மிகவும் கடுமையாகச் சீர் குலைந்து போயின. அந் நாட்டு அரசு உறுப்புகள் உதிரி, உதிரியாகக் கழன்று போயின. அந் நிலையில் அந் நாடுகள் தங்கள் பொருளியல் சீர் குலைவுகளைச் சீர் செய்து கொள்ள முயன்றன. அதே நேரத்தில் அந் நாடுகளுக்கு எதிரான தேசிய இன எழுச்சியையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தேசிய இன எழுச்சியைத் தணித்துக் கொள்ளவும், தங்கள் பொருளியலை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பாகவும் அறிவியல் அறிஞர்கள் பலரின் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும் பழைய நிலமானிய முறையில் நீக்கிப் புதிய அறிவியல் தொழில்கள் தோன்றுவதற்கு வழி வகுத்துக் கொண்டும் இருந்தன.

இந்தச் சூழ்நிலையில் ஒரே தேசிய இன வழியில் இரண்டு பிரிவுகள் தோன்றலாயின. சிறுபான்மையைக் கொண்ட முதலாளிகள் என்கிற ஒரு கும்பலும், பெரும்பான்மையைக் கொண்ட தொழிலாளர்கள் என்கிற ஒரு பிரிவும்.

இத்தகு தொழிற்புரட்சியில் இங்கிலாந்து நாடு தான் முன்னிலையில் இருந்தது. காரணம் பல நாடுகள் இங்கிலாந்தின் ஆளுமைக்குட்பட்டு அந் நாடுகளின் செல்வங்கள் இங்கிலாந்து நாட்டில் ஆறாக ஓடியதுமின்றி அறிவியல் அறிஞர்கள் பலரின் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும், தொழில் முன்னேற்றம் ஏற்படக் காரணம் ஆயிற்று. அத்தகைய அறிவியல் அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவரான "சேம்சு வாட்டு" (கி. பி. 1765) என்பவர் நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இந்த நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பால் நற்பயன்கள் கிடைத்தன. எனினும் தொடக்கத்தில் மக்கள் அதன் பயனை நன்கு உணரத் தவறினர்.

மாடுகள், குதிரைகள் இவற்றின் பயன்களை விட நீரும், நெருப்பும் சேர்ந்து உருவான நீராவியால் மிக நல்ல பயன்கள் விளைந்தன.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கிழக்கிந்தியக் குழுமம் அமைக்கப் பெற்று, இந்தியத் துணைக் கண்டத்தில் வாணிகம் நடத்திட மொகலாயப் பேரரசன் சகாங்கீரிடம் அனுமதி பெற்ற நேரத்தில், இந்தியாவின் - குறிப்பாகத் தமிழகத்தின் - அழகிய துணிகள் மற்றும் பலவகைப் பொருள்கள் அந் நாட்டு முதலாளிகளுக்கு இங்கிலாந்து நாட்டில் விற்பனையாகி, ஊதியத்தை ஈட்டித்தந்தது.

சேம்சுவாட்டு கண்டுபிடித்த நீராவியால் இயங்கும் தறிகள் இங்கிலாந்து முதலாளிகளைக் கவர்ந்ததும் 1785-இல் நீராவியால் இயங்கும் தறிகள் கொண்ட ஆலைகள் மிகுதியாக இங்கிலாந்தில் அமைக்கப்பட்டன.

அதன் விளைவாக நிரம்ப ஆலைகள் உருவானதால், மிகுதியான துணிகள் நெய்யப்பட்டன.

அதே காலத்தில் 1802-இல் பல்டன் எனும் அறிவியல் அறிஞர் நீராவியால் ஓடும் கப்பலைக் கண்டுபிடித்தார். இந்தக் கப்பல் பலகைக்கு மாறாக இரும்புத் தகடுகளால் செய்யப்பட்டு, நெருப்புப் பற்றக் கூடிய அச்சம் இல்லாமல் இருந்தது. மேலும் இக் கப்பல் பழைய கப்பலைவிடப் புதிய முறையில் இயக்கப் பெறவும் நீராவியின் ஆற்றலால் மிக விரைவாகப் பயணம் செய்யவும் கூடியதாக இருந்தது. இதனால் இங்கிலாந்து நாட்டுத் துணிகளையும், பொருள்களையும், பல நாடுகளுக்குக் கொண்டு சென்று வணிகம் செய்து, வெள்ளை முதலாளிகள் செல்வம் பெருக்கிக் கொண்டார்கள்.

1825-இல் அறிவியல் அறிஞர் "சார்சு இசுடீவன்சன்" என்பவர் நீர் நெருப்பு இவற்றின் உதவியால் ஓடும் தொடர் வண்டியைக் கண்டுபிடித்தார்.

இசுடீவன்சன், தாம் கண்டுபிடித்த தொடர் வண்டியை டாக்ட்டனிலுக்கும் டார்லிங்டனுக்கும் இருப்புப் பாதைகளை அமைத்து, சில பெட்டிகளுடன் மணிக்கு 12 கற்கள் வேகத்தில் ஓடச் செய்தார்.

இந்நாள் வரையிலும் இரண்டு பேர்களிலிருந்து நான்கு பேர்கள் வரையிலும் குதிரை பூட்டிய வண்டிகளில் பயணம் செய்து வந்த மக்களுக்குத் தொடர் வண்டி கண்டுபிடிப்பால் ஒரே சமயத்தில் 150 பேர்கள் பயணம் செய்யவும், தொழிற்சாலையில் உருவாகும் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் எடுத்துச் செல்லவுமான பொருள் செலவும் நேரமும் எச்சப்பட்டன. ஊதியம் மேலும் பெருகியது. தொடக்கக் காலத்தில், விறகுகளைக் கொண்டு எரித்து நீரினைக் கொதிக்க வைத்து அதன் ஆவியால் தொடர்வண்டிப் பொறியை ஓடச் செய்தார்கள். சில ஆண்டுகளில் நிலக்கரிச் சுரங்கங்களைக் கண்டுபிடித்தமையால், பொறியினைப் புதிய முறைப்படி திருத்தி அமைத்து அதன் விரைவை மேலும் மிகுதியாகச் செய்தனர்.

தொடர்வண்டி வரவினால் கிடைக்கக் கூடிய பல நன்மைகளைப் புரிந்து கொண்ட பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது எனக் கருதி இருப்புப் பாதைகளை அமைத்துக் கொண்டு, தொடர் வண்டிகளை இயங்கச் செய்தன. 1850-க்குப் பின் தொடர்வண்டித் துறை ஐரோப்பிய நாடுகளில் பெரும் வளர்ச்சி பெற்றுவிட்டன.

1850-ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தில், நம் தமிழ் நிலத்தின் நிலைமைகளை நோக்குவோமானால் துயரங்கள்தாம் நம் நெஞ்சினில் கனக்கும்; கண்களில் இரத்தம்தான் சொரியும்!

தமிழ்நாட்டில் தமிழரின் வல்லாட்சியும், நல்லாட்சியும் இல்லாமையும், பஞ்சம், பட்டினி, வறுமையும் சேர்ந்து தமிழ்க் குமுகாயத்தை வாட்டித் துன்புறுத்தின.

இடைவிடாத அயலவர்களின் படையெடுப்பும், நீடித்த போர்களும் தமிழர்களின் வாழ்வியலைச் சூறையாடின. இந்தப் போர்கள் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்களை ஓரிடத்தில் வாழச் செய்யாமல் ஊர்-ஊராகவும், காடுகள், மலைகளுக்கும் விரட்டின.

இறுதியாகத் தமிழ்நிலத்தின் தன்னுரிமைகளுக்குப் போராடிய தமிழ் வீர மறவர்கள் கட்டபொம்மன், ஊமைத்துரை, மருதுபாண்டியர், புலித்தேவன், தீரன் சின்னமலை இவர்கள் வெள்ளையர்களின் வல்லாளுமை ஏற்படாமல் தடுக்கவும், மீண்டும் தமிழ்நாட்டில் தமிழராட்சி ஏற்படவும், வெள்ளையர்களை எதிர்த்துக் கடுமையாகப் போர் புரிந்தார்கள்.

வெள்ளையர்களிடமிருந்த புதிய போர்க் கருவிகளோ, துமுக்கிகள், பெரும் கற்கோட்டைகளைத் தகர்க்கச் செய்யும் தகரி (பீரங்கி) வண்டிகள், வெடி மருந்துகள், ஆயிரக் கணக்கான படைவீரர்கள் ஆகியவை.

இத்தனை வாய்ப்புகளும் பெற்ற வெள்ளையர் படைகளுடன், எந்த வாய்ப்புமின்றி - புதிய போர்க் கருவிகள் துமுக்கிகள், தகரி (பீரங்கி) வண்டிகள் இவை போன்ற எந்தக்கருவியும் இன்றி-வாள், வேல் முதலிய கருவிகளும், சிறுசிறு படைகளும் கொண்டு வீரத்தோடு போர்புரிந்தார்கள், தமிழக விடுதலை வீரர்கள். எனவே, தோல்வியடைந்தார்கள்.

முடிவாக, தமிழ்நாடு முழுவதும் வெள்ளையர்கள் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். சில ஆண்டுகளில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அவர்களின் ஆளுமைக்கு வந்ததும், தமிழ்நாட்டையும் இந்திய ஆட்சியில் சேர்த்து விட்டான். (அன்று தமிழன் வெள்ளையனுக்கு அடிமையானான். இன்று வடநாட்டானுக்கு அடிமையானான்.)

அந்தக் காலக் கட்டத் தமிழ்நிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டிருந்தது. எங்கும் கொள்ளைகள், வழிப்பறிகள், கள்ளர் அச்சம் இவையே மிகுந்து இருந்தன. மக்களுக்கு எந்தவகைப் பாதுகாப்பும் இல்லை. தமிழக மக்கள் மிகுந்த அச்சத்தோடு வாழ்ந்தார்கள். வெள்ளையர்களுக்கு, மீண்டும் தமிழகத்தில் விடுதலைப் புரட்சிகள் நிகழ்ந்து விடுமோ என்கிற அச்சம், கவலை இவை மிகுந்து, விடுதலைப்போர் எழாமல் தடுக்க ஆங்காங்கே படைகளை வைத்துக் கண்காணித்தனர்.

அதே நேரத்தில் தமிழ் நிலத்தில் தங்களின் ஆட்சியினை நிலைப்படுத்திக் கொள்ள மிகுந்த கவனம் செலுத்தினார்கள். தமிழ் மக்கள் மீது பலவகை வரிகளைப் போட்டு, வரிப்பணத்தைத் தண்டல் செய்ய தண்டல் முறையினைக் கடுமையாக்கினார்கள்.

தண்டல் பணம் ஆங்காங்கு கொள்ளை போவதைத் தடுக்கவும், வரிப்பணத்தை ஒழுங்கான முறையில் கருவூலம் சேர்க்கவும், ஓரிடத்திலிருந்து, மற்றோரிடம் விரைவாகப் படைகளை அனுப்பவும், தமிழ்மன்னர்கள் அமைத்த மண் சாலைகளைச் செப்பனிட்டனர்.

ஆங்காங்கு காவல் சாவடிகளை நிறுவினர். விரைவாகச் செய்திகளையும் அரசுக் கட்டளைகளையும் அனுப்பத் தொலைவரி அமைப்புகளை அமைத்தார்கள்.

இத்தனைக்கும் அவர்கள் அரசாட்சியை நீடித்து நிலைக்கச் செய்துகொள்ள சாலைப் போக்குவரத்தினை விரிவாக்கிக் கொள்ள முயன்றனர்.

இத்தகு நிலையில் ஐரோப்பிய நாடுகளில் இருப்புப் பாதைகளை அமைத்துத் தொடர்வண்டிப் போக்குவரத்தினை விரைவாகவும், எளிதாகவும் அமைத்தது போல் தமிழ்நாட்டிலும் இருப்புப் பாதைகள் அமைத்துத் தொடர்வண்டிப் போக்குவரத்தினைத் தொடங்க முடிவு செய்தனர்.

1853-ஆம் ஆண்டில் முதன் முதலாகச் சென்னை வியாசர்பாடியிலிருந்து, வாலாசா வரைக்குமான 63 கற்களுக்கு இருப்புப் பாதை அமைக்கப்பட்டுத் தொடர் வண்டி விடப்பட்டது.

மேலும் பல நூறு கற்களுக்கு இருப்புப் பாதைகளை அமைத்து மக்களின் போக்குவரத்துக்குத் தொடர் வண்டிகள் விடப்பட்டன. மேலும் தொடர் வண்டிப் பாதைகள் அமைத்துத் தமிழ் மக்களுக்கு நன்மைகள் செய்தார்கள்.

இதையடுத்து 50 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தொடர்வண்டிப் போக்குவரத்து சிறப்பான வளர்ச்சி பெற்றது.

1916-17-க்குப் பின்னர் இந்தியத் துணைக்கண்டத்தில் விடுதலைக் கிளர்ச்சி முவ்வுரமடைந்தது. அந்தக் காலக் கட்டத்திற்குப்பின்னர் காந்தியாரின் தலைமையின் கீழ் விடுதலைப்போர் தொடங்கியது.

1947-ஆகஸ்ட்டுத் திங்கள் 15-ஆம் நாள் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்றது. 150 ஆண்டுகள் தமிழர்கள் வெள்ளையனுக்கு அடிமையாக இருந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 15-ஆம் நாளுக்குப் பின்னர் வடநாட்டு இந்திக்காரனுக்கு அடிமையானார்கள். பாக்கித்தான் விடுதலைக்காக அந் நாட்டு மாபெரும் தலைவர் 'சின்னா' போராடி வெற்றி பெற்றார். தனித் தமிழ்நாட்டுக்காகத் 'தந்தை பெரியார்' போராடிக் கொண்டிருந்தார். தனித் தமிழ்நாட்டுக் கொள்கையில் உறுதியாக இருந்தார். எனினும் அன்று தமிழ் மக்களிடத்தில் பிறந்து விட்ட நச்சுப் பிறவிகளான பேராயக் கட்சிக்காரர்கள் சிலர் தமிழ்நாட்டை வடநாட்டு இந்திக்காரனுக்குக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். எனவே வெள்ளையன் தமிழ்நாட்டின் ஆட்சியை வடநாட்டு வல்லாளுமையரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றுவிட்டான்.

தமிழ்நிலத்தில் இருக்கும் இருப்புப்பாதைகள் தொடர் வண்டித் துறை முழுவதும், வடநாட்டு இந்திக்காரனுக்குச் சொந்தமாகிவிட்டன.

தென்னகத்தில் 'தென்னிந்திய ரெயில்வே,' 'சென்னை தென் மீட்டர் ரெயில்வே,' 'மைசூர் ரெயில்வே' ஆக மூன்று பிரிவுகளாக இயங்கி வந்த தொடர்வண்டிப் போக்குவரத்துத் துறைகள் 1951-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் 'தென்னிந்திய ரயில்வே' என்ற பெயரில் ஒன்றாக இணைந்துவிட்டன.

(தொடரும்)

உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், தலைப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சுவடி அருணர் : தென்மொழி நா. இளமாறன்.
சுவடி ஆட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன். பல்லடம்-மா. ஆறுமுகம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 78 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829.

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.